Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *peoples daily* மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 10 (26 - 09 - 1991) வியாழக்கிழமை ஓசை 220

## அறிவுறுத்தல் ஆங்கிலத்தில் மாணவர்கள் சிரமம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகம் வெளிவாரிக் கலைமுதல் தேர்வு, வர்த்தக முதல் தேர்வுக்கான பாடத்திட்டத்தினையும் அறிவுறுத்தல்களையும் ஆங்கில மொழியில் வெளியிட்டுள்ளது. 1990 — 1991 கல்வியாண்டிற்கான மேற்படி கற்கை நெறிகள் தொடர்பான கைந்நூல் ரூபா 35க்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதேவேளை விண்ணப்பப் படிவங்கள் ஒரே கடதாசியில் ஆங்கிலத்திலும், (8ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மீது

# அரசியல் குற்றப் பிரேரணை விவாதம்

# அடுத்த கூட்டத் தொடரில் இல்லை

## சபாநாயகர் தீர்வைத் தள்ளிப் போட்டார்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீதான குற்ற விசாரணை கோரும் மனு மீதான விவாதம் ஒக்டோபர் 8-இல் ஆரம்பமாகும். அடுத்த பாராளுமன்ற கூட்டத் தொடரின் போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. இக் குற்றச்சாட்டை விவாதத்திற்கு எடுப்பதா, விடுவதா என்ற தீர்ப்பை சபாநாயகர் எம். எச். முகமட் பிற் போட்டமையால் இந் நிலை உருவானது.

நேற்றுப்பாராளுமன்றத்தில் சுருக்கமான பிரகடனம் ஒன்றை வாசித்த சபாநாயகர் எம். எச். முகமட், ஜனாதிபதிக்கு எதிரான மனு முறைப்படி இருக்கிறது என்ற திருப்தி தமக்கு ஏற்பட்ட பின்னரே அதைப் பாராளுமன்றத்தில் அனுமதிக்கப் போவதாகத் தெரிவித்தார். மனுவில் காணும் கையெழுத்துக்கள் சரியானவைதானா என்று எழுத்து மூலமும், வாய்மொழி (8ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் கடும் போர் தொடர்ந்து நீடிப்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடும் போர் இடம்பெற்று வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் ஒரு மாதமாக நடைபெறும் இந்த நேரடி மோதலில் புலிகள் சளைக்காது போரிட்டு வருவதையிட்டு சிறிலங்கா இராணுவத்தரப்பில் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனையிறவுப் போரில் புலிகள் பெரும் பலத்தை இழந்துவிட்டனர் என்ற கணிப்பீடு தவறானது எனவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்களால் தற்பொழுது உணரத் தலைப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றன.

அதேவேளை மணலாறுப் பகுதியில் தொடர்ந்து நடைபெறும் மோதலில் நேற்று (8ஆம் பக்கம் பார்க்க)

## முறைப்பாடுகளே பதவி விலகக் காரணம்

(கொழும்பு)

- லலித்

கட்சித் தரப்பில் இருந்து தமக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளே சபையில் இருந்து தான் இராஜினாமாச் செய்வது என எடுத்த தீர்மானத்திற்குக்காரணம் என்று நேற்று இரண்டாவது நாளாக பாராளுமன்றம் கூடியபோது முன்னாள் அமைச்சரான லலித் அத்துலத்முதலி தான் (8ஆம் பக்கம் பார்க்க)

## மனச்சாட்சிக்கு அமையவே இராஜினாமாச் செய்தேன்

- பிரேமச்சந்திரா

தமது மனச்சாட்சிக்கமைய நடந்து கொள்வதற்காகவே தான் அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துகொண்டதாக நேற்று இரண்டாவது நாளாக பாராளுமன்றம் கூடியபோது தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்த பிரேமச்சந்திரா அதற்கான காரணத்தை விளக்கி உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஒருவர் எந்த ஒரு அரசி (8ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்டம் நீடிப்பை இராணுவமே தீர்மானிக்க வேண்டும்

(கொழும்பு)

- லொக்கு பண்டார

அவசரகாலச்சட்டம் நீடிக்க வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் போரிடும் படையினரே என்று அவசரகாலச்சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் பேசிய கலாசார அமைச்சர் டபிள்யூ.ஜே.எவ்.லொக்கு பண்டார கூறினார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பிரேமதாசா மீது நம்பிக்கையில்லா தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கான முன்னறிவித்தலை நேற்று மாலை சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொடுத்துள்ளார். இத் தீர்மானம் பாராளுமன்றக் கூட்டத்தொடர் வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கும்போது சபையில் விவாதத்திற்கு எடுத்துக் (8ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 3 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

### மேஜர் ஜீவா வீரமரணம்

[திருக்கோணமலை]

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித்தாக்குதலினாலும் துப்பாக்கிப்பிரயோகத்தினாலும் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் புலிகளால்கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் மேஜர் ஜீவா [அன்சார்] வீரமரணமடைந்துள்ளார்.

இராணுவத்தினரிடமிருந்து ரீ-81 ரகத் துப்பாக்கிகள் 02, ( 8ஆம் பக்கம் பார்க்க)

### இன்று கப்டன் அக்காச்சி எழுச்சி குடியிருப்பு

இன்று மாலை 7 மணிக்கு விடுதலைப் புலிகள் பிரதித்தலைவர் கோ. மகேந்திரராசா திறந்து வைப்பார்.

## எட்டுப் புலிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில்நேற்று முன் தினம் (24-09-91) ஏழு புலிகள் வீரமரணமடைந்தனர்.

★ மகினன் - (ராமலிங்கம், பொன்குமார், கொழும்புத் (8ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி எங்கும் திலீபன் நினைவுநாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

தாயகத்தின் சுதந்திரத்திற்காக தியாக மரணமடைந்த தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு தினங்களையொட்டி பல்வேறு இடங்களிலும் சிரமதான நிகழ்ச்சிகளும் உண்ணாவிரத நிகழ்வுகளும், நினைவுக் கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

★ தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, யாழ். செயலக ஊழியர்கள் நேற்றுக் காலைமுதல் செயலக வளவில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். உயர் அதிகாரிகள் உட்பட சகலரும் இப்பணியில் ஒருங்கிணைந்து சிறப்பாகச் செயலாற்றினர். (24)

★ தியாகி திலீபனின் திருவுருவப் படத்தைத் தாங்கிய ஊர்தியொன்று மங்கல வாத்திய இசையுடன் ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, பாசையூர், அரியாலை போன்ற இடங்களினூடாகப் பவனி வந்தது. (43)

★ அரியாலை சனசமூக நிலையத்திற்கு முன்னாலுள்ள விஸ்திரணமான காணியொன்று பெண்களினால்சிரமதான முறையில் துப்புரவு செய்யப்பட்டு, மகளிருக்கான புதிய மைதானம் ஒன்று அமைக்கப்பட்டது. மேற்படி மைதானத்தை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இராஜன் நேற்றுப் பிற்பகல் (8ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் மக்கள் யுத்தம் திலீபன்விரும்பியது நடக்கிறது

(யாழ்ப்பாணம்)

- கரிகாலன்

''தியாகி திலீபன் விரும்பிய மக்கள் புரட்சியின் மற்றும் ஒரு வடிவம் மணலாறு யுத்தத்தில் பிரதிபலிக்கின்றது. தாயகத்தைத் துண்டாட முயலும் சிறிலங்கா அரசின் முப்படைகளுக்கும் எதிராக மணலாறு மக்கள் ஆயுதம்தாங்கிப் போராடி வருகின்றனர்'' இவ்வாறு தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவாக தல் (8ஆம் பக்கம் பார்க்க)

நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பைவிட்டுச்செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.

— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழகம்

# யாழ். பல்கலைக்கழக ஆய்வு நூல்களின் விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது ஆய்வுகளை பிரசுரங்களாக வெளியிடுவதுடன் அவற்றை விற்பனை செய்யவும் ஆரம்பித்துள்ளது. இதன் முன்னோடியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதநிலை விரிவுரையாளராகப் பணிபுரியும் திரு. எஸ் சிவலிங்கராஜா [M.A] அவர்களால் ஆய்வு செய்து வெளியிடப்பட்டுள்ள "வித்துவ சிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்" என்னும் நூல் யாழ். பல்கலைக்கழகத்தில் வரவேற்புப் பகுதியில் விற்பனைக்குள்ளது. பிரதி ஒன்றின் விலை ரூபா 30/- ஆகும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் வியாபாரிகள் நிதியாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இதனை தபால் கட்டளை /காசுக் கட்டளை ஆகியவற்றை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும் தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புவர்கள் சாதாரண தபால் செலவாக ரூபா 4/- மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தபால் கட்டளை, காசுக் கட்டளை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும்.

பின்வரும் ஆய்வுகள் அச்சில் உள்ளன:

1. பண்டைய தமிழகம்.
   கலாநிதி எஸ் கே. சிற்றம்பலம்.
2. நூலகவியலில் பட்டியலாக்கம்
   திருமதி. வி. பாலசுந்தரம்.
3. இறால் வளர்ப்பு (ShrimpCulture)
   கலாநிதி கே. சிற்றம்பலம்

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

(B-3190)

## வரி விளம்பரம்

### தாதிகள் தேவை

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைக்கு பயில விரும்பும் பெண்தாதிகள் உடன்தேவை. 29ஆம் திகதி (ஞாயிறு காலை 9-00 மணிக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்துக்கு சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவம். *MEDICINA ALTERNATIVA*, 121/2, *MANIPAY ROAD, JAFFNA.* (பிள்ளையார் ஸ்ரோருக்கு அருகாமை)
(R-1779)

## இரவு மீன் பிடிக்கத்தடை

(மட்டக்களப்பு)

காத்தான்குடி ஆற்றில் காலை 6மணி முதல் மாலைஆறுமணி வரையுமே மீனவர்கள் மீன் பிடிக்கலாம். அதன் பின்னர் ஆற்றில் காணப்படுவோர் சுடப்படுவர் என்று சிறிலங்கா இராணுத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

## 'எனது பார்வையில் ஓர் ஆசிரியன்'

(யாழ்ப்பாணம்)

ஒக்டோபர் ஆறாம் திகதி வரும் உலக ஆசிரியர் தினத்தையொட்டி யாழ். கல்வித்திணைக்களத்தால் "எனது பார்வையில் ஓர் ஆசிரியர்" என்னும் கையேடு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர் சுயதொழில் மதிப்பீடு, ஆசிரியர் கீதம். மாணவருக்கான ஓவியப்போட்டி அறிவிப்பு என்பன இடம் பெற்றுள்ளன. ஒவ்வோர் ஆசிரியரும் தத்தமக்குரிய கையேட்டைத் தமது பாடசாலை அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். கல்வித்திணைக்களம் கேட்டுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

1991 - 09 - 26



லெப். கேணல்
**திலீபன்**



மேஜர்
**சுரேந்திரன்**

1987ஆம் ஆண்டு இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீராகாரமும் அருந்தாது உண்ணாவிரதமிருந்து இதேதினத்தில் தியாக மரணமெய்திய அரசியல் பிரிவுப் பொறுப்பாளர்
**லெப்.கேணல் திலீபன்** (இராசையா பார்த்திபன் - ஊரெழு மேற்கு)

துணுக்காயில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய
**அமலதாஸ்** (நாகமுத்து மகேஸ்வரன் - செம்மலை)

1988ஆம் ஆண்டு அளம்பிலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
**வைத்தி** (செந்தில்வேல் தேசிங்கராஜா - மயிலிட்டி, காங்கேசன்துறை)

திருக்கோணமலை, சலப்பையாறு பகுதியில் இந்தியப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
**மேஜர் சுரேந்திரன்** (காளிராசா சிறீபாஸ்கரன் - 'முருகாபுரி' உப்புவெளி, திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு கோடாலிக்கல் பகுதியில் இந்தியப் படையினரின் மிதி வெடியில் சிக்கி வீரமரணமெய்திய
**ஜஸ்ரின்** (ஆறுமுகம் புலேந்திரன் - முள்ளியவளை)

**காண்டீபன்**

தேசத்துரோகிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த எமது ஆதரவாளர் **செல்லையா ஜேசப்**

1990ஆம் ஆண்டு யாழ் கோட்டை முகாம் தாக்குதலின் போது வீரமரணமெய்திய
**லெப்.நகுலன்|நேசன்** (இராசதுரை சிவனேசராசா- வத்திராயன் வடக்கு, தாழையடி)

**ரகு** (இராசலிங்கம் றொபேட் சாந்தகுமார் - கட்டுடை, மானிப்பாய்)

மாங்குளத்தில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய
**மதன்**

அம்பாறை, விநாயகபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டு, பின்னர் கடலோரத்தில் சடலங்களாக கரையொதுங்கிய மூன்று தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3185)

## வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!



15.04.1991க்குமுன்பு எம்மிடம் சீர்படுத்தலுக்காக ஒப்படைத்த வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி, கடிகாரவகைகள் என்பனவற்றை மீளப்பெறாதவர்கள் தகுந்த ஆதாரங்களோடு 15.10.1991க்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். ஆதாரங்கள் இல்லாத பட்சத்தில் பொருட்கள் வழங்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகிறோம்.

**ஈஸ்வரன் அன் சன்ஸ்**
மின் இலத்திரனியல்
இல. 3 ஜனார்த்தனன் (விக்ரோறியா) வீதி யாழ்ப்பாணம். (B/3192)

# தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவாக



பாரதப் படை நடுங்க
பார்த்திபன் தொடுத்த போர்!
நீரும் தொட மறுத்து
நீண்ட சத்தியப் போர்!!

நல்லூரின் வீதியில் திலீபன் நோன்பு
நானிலம் மீதில் தமிழரின் மாண்பு
சொல்லிட வைத்தது. தேசம் விழித்தது
சோதனைக் களத்தில் சத்தியம் நின்றது.

கனவுகளோடு கண்களை மூடினான்
நனவுகளாக்கல் நம்மவர் வேலை
தினவெடுக்கும் தோள்களை உயர்த்தி
தினமும் நடந்திடு களத்தினை நோக்கி.

சுவையருவி
மின் நிலைய வீதி,
யாழ்நகர். (B-3193)

# The College of Higher Studies

## ஆனைப்பந்தி

பேராதனைப் பல்கலைக்கழக G.A.Q (92)
B.A (91) வெளிவாரி பட்டப்படிப்பு
மாணவர்களுக்கான வினாவிடை விரிவுரைகள்

ஆரம்பம்:- 30-09-1991

| தமிழ் - திரு. குழந்தைவேல் | அரசியல் - திரு. குமாரவேல் |
|---|---|
| B.A தமிழ் 4.00-5.00 | B.A அரசியல் 5.00-6.00 |
| G.A.Q தமிழ் 5.00 6.00 | G.A.Q அரசியல் 4.00-5.00 |

(ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில்)

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

**மாணவர் கவனத்துக்கு**

யாழ்/பேராதனைப் பல்கலைக்கழக கல்வியாண்டு 92/93 வெளிவாரிப் பட்டப்படிப்புக்களுக்கான எமது 'தமிழ்' விரிவுரைகள் கல்வி அமைச்சின் அங்கிகாரம் பெற்ற ஆனைப்பந்தியில் உள்ள

THE COLLEGE OF HIGHER STUDIES

இல் மட்டுமே யாழ். நகரில் நடைபெறும்.

இங்ஙனம்
K. குழந்தைவேல்

(B/3191)

---

## தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவாக



தாயகத்தின் விடிவிற்காய்
தன்னையே அர்ப்பணித்து
தரணியையே வியக்க வைத்தனையோ திலீபா
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆதிக்க வெறியரை அழித்திடும் வரை
அடங்குமா உன்பசி?

DHL WORLDWIDE EXPRESS

கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(B-3195)

---

## தியாகத்தில் ஆகுதியான திலீபனின் நினைவாக

நான் என்றும் உங்களை விட்டுப் போக மாட்டேன். எனது உடல் மட்டும்தான் போகும். உயிர் உங்களோடு ஒட்டியிருக்கும். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை எமது லட்சியம் தான் முக்கியம். உயிர் முக்கியமல்ல. அதை நிலை நாட்டவே நான் தலைவரால் முதல் முதல் நியமிக்கப்பட்டேன். நான் என் உயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பொறுப்பை விட்டுச் செல்கின்றேன்:



"நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழ வேண்டும் இங்கு ஒரு மக்கள் புரட்சி வெடிக்கட்டும்."

— திலீபன்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்

(B/3184)

---

## வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி, வவுனியா.

பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன (கோரப்படும்).

**உதவிப்பதிவாளர் / உதவி நிதியாளர்**

வவுனியாவிலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரியில் உதவிப்பதிவாளர் / உதவி நிதியாளர் பதவிகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும்.

**உதவிப்பதிவாளர்:-**

**தகைமைகள்:-**

1. (அ) முதலாம் இரண்டாம் வகுப்பு சிறப்புத் தேர்ச்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம்.

   அல்லது

   (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றுடன் பட்டப்பின் பட்டம் அல்லது நிருவாகத்தில் அல்லது முகாமைத்துவத்தில் டிப்ளோமா.
2. சம்பள அளவுத்திட்டம்:-
   ரூபா 3900-3X 50-4350 (வினைத்திறமை காண்தடை)
   4950-12X200-7350/- (மாதமொன்றுக்கு)
3. வயது:-35 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**உதவியாளர்:-**

**தகைமைகள்:-**

1. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம். அத்துடன்

   (ஆ) கணக்கியலிலும் / அல்லது கணக்காய்விலும் குறைந்தபட்சம் மூன்றாண்டு அனுபவத்துடன் இலங்கை, பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடை நிலைத்தேர்வில் சித்திபெற்றிருத்தல்.

   அல்லது

   (இ) ஐக்கிய இராச்சியத்தின் செலவு, முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் அடிப்படைநிலை பகுதிகள் அ, ஆ வின் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் சித்தியுடன் உயர் தொழில் நிலைத்தேர்வின் முதலாம் பகுதியிலும் சித்தியடைந்திருத்தல் அல்லது கணக்கியலில் / அல்லது கணக்காய்வில் குறைந்தபட்சம் மூன்றாண்டு அனுபவத்துடன் ஐக்கிய இராச்சியத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பெற்ற கணக்காளர்களின் முதலாம் இரண்டாம், மூன்றாம் பகுதிகள் ஒவ்வொன்றிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   (ஈ) கணக்கியலிலும் / அல்லது கணக்காய்விலும் மூன்றாண்டு அனுபவத்துடன் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலில் உயர்தேசிய டிப்ளோமா.
2. சம்பள அளவுத்திட்டம்:-
   ரூபா 3900-3X150-4350 (வினைத்திறமை காண் தடை)
   4950-12X200-7350/- (மாதமொன்றுக்கு)
3. வயது:-35 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**குறிப்புக்கள்:-**

1. மேற்குறித்த பதவிகள் அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் / நியதிச் சட்ட சபைகள் / உயர் கல்வி நிறுவனங்கள் / நிறுவகங்கள் ஆகியனவற்றின் ஊழியர்க்கு ஏற்புடையனவல்ல.
2. அரசாங்கக்கொள்கைக்கு இசைவாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் உருவாக்கப்பட்ட எழுத்துத்தேர்வு / பரீட்சையின் அடிப்படையில் தெரிவுகள் நடைபெறும்.
3. முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, வயது, கல்வி சார்ந்த உயர்தொழில் சார்ந்த தகைமை, அனுபவம், இதர விபரங்கள், தங்களைப்பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் பெயர்கள், விலாசங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு 1991, ஒக்ரோபர் 10 ஆம் திகதியோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.
4. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, உயர்கல்வி நிறுவனங்கள் / நிறுவகங்கள், அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியனவற்றிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அவற்றின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
1991-09 24.

(B/3189)

# அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு

**சிந்தனைக்கு**

உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர்துறப்போர் ஒரு நாளும் தோற்பதில்லை

— பைரன்பிரபு


**ஈழநாதம்**

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 26-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 325-2835 நிர்வாகபீடம் 5898
த. பெ. இல 05


## திலீபனின் இலட்சியம் நிறைவேறுவது திண்ணம்

செப்டம்பர் 26ஆம் நாள்.

தியாகி திலீபன் அமரத்துவமடைந்த நாள்.

தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றுடன் இணைந்து விட்ட மறக்க முடியாத நாள்.

இந்திய வல்லாதிக்கத்திற்கும், சிறிலங்காப் பேரின வாதத்திற்கும் தமிழர் தேசிய இனப்போராட்டத்தின் எல்லை எங்கு வரை செல்லும் என்பதையும், அதற்காக தமிழர் எவ்வகையான தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கின்றார்கள் என்பதையும் உணர்த்திய நாள்.

தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் பாதுகாப்பிற்காகவும், சாகும்வரை உண்ணாவிரதமிருந்த தியாகி திலீபன் செப்டம்பர் 26இல்தான் மரணித்தான். தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்காக பேச்சில், எழுத்தில், போராட்ட களத்தில் எல்லாம் தனி முத்திரையைப் பதித்தவன் தியாகி திலீபன்.

இளவயதிலேயே போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட தியாகி திலீபன் தமிழ் மக்கள் பற்றியும், அவர்களின் எதிர்காலம் பற்றியும் கொண்டிருந்த எண்ணங்கள் திட்டங்கள் மிகப் பெரியவை. அவன் தனது காலத்தில் சாதித்தவையும் மிகப் பெரியவை.


யாழ் கோட்டை அந்நியரின் ஆதிக்கச் சின்னம். தமிழரின் சுதந்திரத்தைப் பறித்தவர்கள் காலத்திற்குக் காலம் மாறிமாறிக் கோட்டையில் ஆட்சி புரிந்தனர். இந்தக் கோட்டையில் எப்பொழுது புலிக்கொடி பறக்கின்றதோ அப்பொழுதுதான் தமிழர் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்குவர் எனக் குறிப்பிட்டவன் தியாகி திலீபன்.

ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு, சாதி ஏற்றத் தாழ்வுகள் களையப்பட வேண்டும், பெண்களின் உரிமைகள் வழங்கப்பட்டு சரிநிகர் சமனாக அவர்கள் நடத்தப்பட வேண்டும் எனத் திலீபன் திடசங்கல்பம் கொண்டிருந்தான். அதற்காக அயராது ஓய்வு, ஒளிச்சலின்றி இரவு பகல் வேறுபாடு இன்றி உழைத்தான். தனது மரணத்தின் மூலமாவது தனது இலட்சியம் நிறைவேறியே ஆக வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தான். இதன் வெளிப்பாடாகவே தனது உண்ணா நோன்பின் போது "மக்கள் புரட்சி வெடிக்கட்டும், தமிழீழம் மலரட்டும்" எனத் தெரிவித்தான்.

திலீபன் அன்று கண்ட கனவுகள் இன்று நனவாகத் தொடங்கிவிட்டன. அவனது மூன்றாம் ஆண்டு நினைவு நாள் அன்று யாழ். கோட்டையில் புலிக்கொடி பறந்தது. அவனது நான்காம் ஆண்டு நாள் நினைவன்று ஏழை மக்களின் துயர்துடைக்க முதலாவது எழுச்சிக் குடியிருப்பு அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் கெரில்லாப்படை அணி மரபுப் படையாகிறது. பெண்களின் பெரும் படையணியும் உருவாகி வருகிறது. மாதக் கணக்கில் எல்லையில் எமது போராளிகள் எதிரியுடன் மோதுகின்றனர்.

இந்நிலையில் தியாகி திலீபனின் இலட்சியமான ஏற்றத் தாழ்வற்ற சுதந்திரத் தமிழீழம் உருவாவது திண்ணம்.



கப்டன் அக்காச்சி

வல்லிகாமம் கிழக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தூரத்துத்தொடுவானமாகக் காணப்படுவது பெரிய பொக்கணைக் குடியிருப்பு பக்கத்தில் வட கிழக்காக வடமராட்சியின் எல்லைக் கிராமமான தல்பூது. வடமராட்சியையும் வலிகாமம் கிழக்கையும் கோடிட்டுக் காட்டுவது போல் இந்த இரு கிராமங்களை ஒட்டியும் பற்றியும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கலட்டி நிலம்.

வழியில் புத்தூரில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபை, மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள் மற்றும் பரம்பரை விவசாயமுறைச் சீரழிவு ஆகியவற்றால் ஏற்பட்ட நகர்மயப் போக்கு அம்சங்கள் பெரிய பொக்கணையைப் பாதித்ததாகத் தெரியவில்லை.

நிலத்துக்கடியில் கல்லடுக்குகளில் காணப்படும் பொக்கணைகளால் (குழிகள்) பெரிய பொக்கணை என்ற காரணப் பெயர்போலும். இந்தக்கிராம வாசிகளுக்கு அந்தப் பெயரில் என்னவோ தொக்கியிருப்பதாக சூட்சம் வேறு. பெயரில் என்ன இருக்கிறது என்று ஷேக்ஷ்பியர் கேட்டிருந்தார். அவருக்கு யாழ்ப்பாணம் வர வாய்ப்புக் கிடைத்ததில்லை. கிடைத்திருந்தால் அப்படிக் கேட்டிருக்கமாட்டார்.

பிரதானபாதையைப்பகைப் புலமாகத் தள்ளி விட்டுப்புத்தூர் சந்திக்கு அருகாமையில் புழுதி படிந்த கிரவல் பாதையில திரும்பினால் வீதியின் இரு பக்கங்களிலும் வானம் பார்த்த பூமியின் புன்னகை நெடு வயலின் நடுவே கோடு கிழித்தாற்போல புதிய வீதி, வீதியின் இரு மருங்கிலும் சலடு, உலர்நிலம், முட்புதர்கள், குடிசைகள் சார்ந்த ஒடுங்கிடங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சங்கிக்குப் பயறு போட்டது போல் சில கல்வீடுகள்,

கண்டிக் காட்டிற்குத் தெற்கே தரைம் பிள்ளையார் கோயிலையும் கண்டிக் காட்டையும் ஊடறுத்துச்செல்லும் வாதரவத்தைப் பாதையில் நின்று பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு தொகுதிக் கட்டடங்கள். அதுதான் அக்காச்சி வீடமைப்புத் திட்டம். பெரிய பொக்கணை அக்காச்சி கிராமம் என்று ஞானஸ்நானம் பெற்றுள்ளது.

அவ்விடத்தில்- அக்காச்சிகிராமத்தில் முப்பது குடும்பங்கள் குடியும் குடித்தனமுமாக வாழ்கின்றன. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக அதிகாரிகள் அடையாளம் காண்கிறார்களே, அதைவிட வறுமை.


வாழும் முறை, சில தேவைகள் மற்றும் சமூக நிர்ப்பந்தங்கள் காரணமாக எந்த உறவிலும் பிடிமானம் கொள்ளாது விடுபட்டிருந்த இந்தக் கிராமம் இப்போது களை கட்டியுள்ளது. உடலுக்கு இதம்தரும் குளிர்ச்சியான தெங்குத் தோப்புகளுக்கிடையில் முப்பது வீடுகள் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றன. வீடுகளின் வடிவமைப்பு இயல்பாகவே உள்ளது. ஒவ்வொன்றும் இரண்டே முக்கால் பரப்பளவு காணி நிலத்தில் 18 அடி அகலமும் 21 அடிநீளமுமான வீடு. வீட்டுக்கு வீடு அழகையும், பயனையும்தரும் தென்னைமரங்கள். நடு உச்சி வெயிலுக்குக் குடைபிடிப்பது போன்று தென்னை மரங்கள் அசைந்தாடின.

*காணிநிலத்திடையே-ஓர்*
*மாளிகை*
*கட்டித்தரவேண்டும்; அங்கு*
*பத்துப் பன்னிரெண்டு -*
*தென்னைமரம்*
*பக்கத்திலே வேண்டும்*

என்ற பாரதியாரின் இதயத் துடிப்பின் வெளிப்பாடாக இந்தவீடுகள்வெள்ளையடித்த சுவர்களுடன் நம்பிக்கையின் சின்னங்களாகத் திகழ்கின்றன.

முன்பு இப்பகுதிக்குப்பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் வறுமை நிலையில் வாழ்ந்த இந்த மக்களை அடையாளம் கண்டு கிராமிய மட்டத்தில் அவர்களுக்கு ஒரு வீடமைப்புத் திட்டத்தை அமைக்க முன்வரவில்லை. பாராளுமன்ற ஆட்சிக்கு உரையும் இலக்கணமும்போல் நகரில் குளுகுளு காரில்சென்ற கோமான்களுக்கு இந்த மக்களின் நிலை தெரிய நியாயமில்லை.

> 'எல்லைக் கிராமங்களிலும், குறிப்பாகப் பொருளாதார வகையில் கீழ் நிலையில் வாழும் கிராம மக்களுக்குப் புனர்வாழ்வளித்து சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற எண்ணம் திலீபனின் மனதில் கருக் கட்டியது. இக் கிராம வாசிகளுக்குக் கைத்தொழில் கிடையாது. ஆண்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை இருக்காது. பெரிய பொக்கணையை பொருளாதார வகையில் முன்னேற்ற வேண்டுமென்ற திலீபனின் எண்ணத்தின் விளைவே அக்காச்சி வீடமைப்புத் திட்டம்'
>
> — ராஜன்



தென்னந் தோப்பின் மத்தியில் அக்காச்சி குடியிருப்பு

★ ★ ★

இந்தக் கிராமத்தில் தான் தியாக மரணமடைந்த அக்காச்சியும் அவரது தோழர்களும் தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்புப் படை வெறியாட்டுச் செய்தபோது வாழ்ந்தார்கள். மக்களின் துன்ப துயரங்களை அவர்களும் பகிர்ந்து கொண்டார்கள் இந்த இழப்பு, சாதாரணத்திலும் சாதாரணமாக வாழும் மக்களின் வாழ்க்கையும் அவர்களுக்கு மிகவும் மதிப்புடையதாகத் தோன்றியது. இந்திய இராணுவத்தின் துப்பாக்கிகளின் அச்சுறுத்தல்கள் மத்தியிலும் இக்கிராமத்து மக்கள் புலம்பெயராது மனிதப் பரிவுடன் போராளிகளுக்குப் புகலிடம் வழங்கியது மனதை உலுக்கிவிடுகின்றதுஎன்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல்நிர்வாகப்பொறுப்பாளர் ராஜன் "ஒவ்வொரு குடும்பத்துக்கும்

> 'அக்காச்சி கிராமம்' என இக்குடி... திற்குப் பெயரிட்டவர்களே அக்கிராம... அக்குடியிருப்பிலுள்ள ஒவ்வொரு வீ... மக்களுடன் வாழ்ந்து வீரமரணமடை... களின் பெயர்களைத் தாங்கி நிற்கின்...

குடியிரு... ஒருவரு... என்ற ... இப்போ... ளோம்'... ராஜன் ... இராணு... களின் ... றாடலி... என்பது ... கண்டி... கிழக்கு ... பகுதி. ... யின் அ...



யாழ்... நிர்வா...


இராணு... நடத்தி... திலும்ம... ளிகளுக்... காப்பா... கொண்... பொக்க... கடந்த ... நீறுபூத்... இப பகு... இன்றும் ... நினைவு ... போதெ... தொடங்...

"எல்லை... குறிப்பா... வகையில்... கிராம ... வாழ்வளி... நிற்க வே... ண ம திலீ... கட்டியது... களுக்குக்...

யாது ... முழுவது... பெரிய ... பொருவ... னேற்ற ... பணிஎ... அக்காச்சி... டம்'' எ...

தண்ணீ...

நன்றீர்... துக்குப் ... இருப்பது... நினைக்கி... களை

# தியாகச்சுடர்

தாயக மீட்பின் தாகம் மிகுந்து
தண்ணீருமின்றி தவம் செய்த பிள்ளை!
வாயார வாழ்த்து அவன் வழி செல்லு
வந்திடும் விடுதலை யிங்கு!!

## நியூ லலிதா

(தங்கப்பவுன் நகை வியாபாரம்)


திலீ

...ப்பு சிறப்பு மலர் 26 - 09 - 1991

குடியிருக்க வீடும் வீட்டுக்கு ஒருவருக்குத் தொழிலும் என்ற லட்சியத் திட்டத்தை இப்போது ஆரம்பித்துள்ளோம்'' என்று சொல்லும் ராஜன் முன்னதாக இந்திய இராணுவத்தின் அனர்த்தங்களின் போது இந்தச் சுற்றாடலில் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

கண்டிக்காடு - இது புத்தூர் கிழக்கு கிராமத்தில் ஒரு பகுதி. பெரிய பொக்கணையின் அயற் கிராமம் இந்திய



யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்

ராஜன்

இராணுவம் கள வேள்வி நடத்திய இடம். இந்த நேரத்திலும் மனம் தளராது போராளிகளுக்குப் புகலிடம் தந்து காப்பாற்றிய நல்ல உள்ளம் கொண்டவர்கள் பெரிய பொக்கணைக் கிராமவாசிகள். கடந்த கால நினைவுகள் நீறுபூத்த நெருப்புப் போல் இப் பகுதி மக்கள் மனதில் இன்றும் பதிந்துள்ளன. நினைவு என்ற காற்று வீசும் போதெல்லாம் அது எரியத் தொடங்குகிறது.

''எல்லைக் கிராமங்களிலும் குறிப்பாகப் பொருளாதார வகையில் கீழ்நிலையில் வாழும் கிராம மக்களுக்குப் புனர்வாழ்வளித்து சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற எண்ணம் திலீபனின் மனதில் கருக் கட்டியது. இக் கிராமவாசிகளுக்குக் கைத்தொழில் கிடை...

நீர்தான் ஊறுகிறது. ஆனால் வீடமைப்புத் திட்டத்துக்குக் குழாய் மூலம் நன்நீர் வழங்கப்படவுள்ளது'' என்கிறார் சனசமூக நிலையத் தலைவர் கந்தசாமி சுந்தரவேல்.

வரண்ட வெப்பப் பிரதேசமான யாழ். குடாநாட்டில் வருடத்திற்கு மூன்று மாதங்களே மழை தரும் காலங்கள் மூன்று மாத மழையைத்தான் நாம் வருடம் முழுவதும் நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது. மழை தவிர நீரைப் பெறுவதற்கு வேறு மூலங்கள் இல்லாததால் இப்பகுதி மக்கள் நன்நீருக்குக் கஷ்டப்படுகிறார்கள் என்பது உண்மைதான். மழை நீரைச் சேகரிக்கப் பல வழிகள் இருக்கின்றன. வாதரவத்தை அலட்சியப் படுத்தப்பட்ட கிராமம். காலம் காலமாக இப்பகுதியில் நீர்ப்பிரச்சினைபற்றி யோசிக்க அதிகாரிகள் எவரும் முன்வரவில்லை; அவ்வளவுதான!

பெரிய பொக்கணையும் அயற்கிராமங்களும் மூன்று பக்கங்களிலும் உவர் நிலத்தால் அல்லது பரவைக் கடலால் சூழப்பட்டிருப்பதால் நிலத்தடி நீர் உவர் நீராகவே உள்ளது. பெய்யும் மழையும் சமதளத்தில் கரைந்தோடிக் கடலில் கலக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கிராமவாசிகள் அயற் கிராமங்களில் குடிநீர்க் கிணறுகளையே நம்பியிருக்கிற சூழ்நிலை உருவாகியது. நன்நீரை ஏதனங்களில் கொண்டு


மாதத்துடன் கைவிடப்பட்டுள்ளது இப்போது இந்த வீடமைப்புத் திட்டத்திற்கு தண்ணீர் குழாய் மூலம் தாராளமாகவும் தங்கலின்றியும் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளரும், வீடமைப்புத்திட்டத்தின் மேலாளருமான ராஜன் தெரிவிக்கிறார்.

## தொழில் வாய்ப்பு

''இந்தக் கிராமத்து மக்கள் சுபீட்சமான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம் அந் நோக்கத்தின் முன்மாதிரி இத் திட்டம். சொந்தக்காலில் நிற்பதற்கு ஒரு வழியாக அச்சுவேலியில் கூட்டுப் பண்ணை அடிப்படையில் தோட்டம் செய்யக் காணி வசதி செய்து கொடுத்திருக்கிறோம்'' என்கிறார் ராஜன்.

கிராமவாசிகள் புலம் பெயர்ந்து கிளிநொச்சி மன்னார், பருத்தித்துறை வரை சென்று ஒப்பந்தக் கூலிகளாக வேலை செய்துவந்தார்கள். இவர்களது அமைப்பும் பொருளாதார நிதியாகச் சுரண்டப்பட்டு வந்த காலமும் இருந்தது. இப்போது நிலைமை மாறிவருகிறது கால்நடை வளர்ப்பு, தையல் வேலை ஆகிய தொழில்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படவுள்ளது. மற்றும் சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்பதன் மூலம் இவர்களது ஆற்றலை மேம்

> இந்தக் கிராமத்து மக்கள் சுபீட்சமான வாழ்க்கை வாழவேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம் அந்நோக்கத்தின் முன்மாதிரி இத்திட்டம். சொந்தக் காலில் நிற்பதற்கு ஒருவழியாக அச்சுவேலியில் கூட்டுப்பண்ணை அடிப்படையில் தோட்டம் செய்யக் காணி வசதி செய்து கொடுத்திருக்கின்றோம்''



அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு வீடு ஒன்றின் தோற்றம்

> ' என இக்குடியிருப்புத் திட்டத்...னே அக்கிராமத்து மக்கள்தான். ஒவ்வொரு வீடுகளும் அப்பகுதி வீரமரணமடைந்த போராளி... தாங்கி நிற்கின்றன.

யாது ஆண்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை இருக்காது. பெரிய பொக்கணையை பொருளாதாரவகையால் முன்னேற்ற வேண்டும் என்ற திலீபனின் எண்ணத்தின் விளைவே அக்காச்சி வீடமைப்புத் திட்டம்'' என்கிறார் ராஜன்.

## தண்ணீர்ப் பிரச்சினை

நன்நீர் தமது முன்னேற்றத்துக்குப் பெரிய தடையாக இருப்பதாகக் கிராம வாசிகள் நினைக்கிறார்கள். ''கிணறுகளை வெட்டினால் உவர்

கொண்டு வந்தே பாவனை செய்தார்கள். அந்த முறை மாறி வண்டிகளில் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. இந்த முறையெல்லாம் மாறி செஞ்சிலுவைச் சங்கம் கொள்கலன்களில் நீரை நிரப்பி டிராக்டர்களில் கொண்டுவந்து வழங்கியது. ஒரு வருட காலம் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய நீர் விநியோகம் சித்திரை

படுத்தல் தொழில் வளத்தைப் பெருக்கல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சமச்சீரற்ற தன்மையை இல்லாதொழித்தல், கிராமத்தை அபிவிருத்தி செய்தல், வறுமையை முற்றாக அகற்றுதல் ஆகியன குடியேற்றத் திட்டத்துடன் ஒன்றிணைந்த செயற்பாட்டுத் திட்டத்தினால் கிடைக்கும் பயன்களாகும்.



லெப். கேணல் திலீபன்

தொழில் துறையில் நிறைய மாற்றங்கள் செய்து சம்புப் புல் பாய்களை இழைத்து விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இப்பகுதியில் மாரியை அண்டிய காலப் பகுதிகளில் சம்புப் புல் கணிசமான அளவில் காணப்படுகிறது பெரிய பொக்கணைக் கிராமவாசிகள் சம்புப் புல்லை வெட்டி மீசாலை, நுணாவில், சாவகச்சேரிப் பகுதிகளில் தை முதல் ஆனி மாதம் வரை விற்பனை செய்வது வழக்கம். இரண்டு முழக் கயிற்றால் சுற்றிக் கட்டப்பட்ட ஒரு கற்றைபுல் ரூபா 10க்கு விற்கப்படுகிறது. சம்புப்புல் பாய்களை இழைத்து அவற்றை ஒழுங்கமைத்து ஒரு திட்டத்தின் கீழ் சந்தைப்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது, இது கிராம மட்டத்தில் பெண்களை இணைத்து ஒப்வான நேரங்களில் தமது உழைப்பின் மூலம் பொருள் வருவாயை உயர்த்த உதவுவதாகும்.

உவர் நிலத்தாலும், பரவைக் கடலாலும் சூழப்பட்ட பகுதியாதலால் இப்பகுதியில் வேளாண்மை முயற்சிகள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் மாரிகாலத்தில் கோப்பாய்க் கடலுடன் இப்பகுதியில் தொண்டமானாற்றுக் கடல் சங்கமமாகிறது. ''மாரியில் ஜப்பான், குறளி (இலாப்பியா) விரால், பாலை, முரல், திரளி ஆகிய மீன் வகைகள் இப்பகுதி நீர்ப்பரப்பில் படுகின்றன'' என்று சொல்லும் கிராமவாசிகள், மீன்பிடிப்பதில் தமக்குப் பழக்கம் இல்லை என்கிறார்கள். இக் கிராமவாசிகள் மீன்பிடித் தொழில் பற்றிக் கலந்துரையாடி ஒரு பருவகாலத் தொழிலாக மீன்பிடியைச் செய்தால் பயன்பொருத்தமான வருவாய் கிடைக்கும் என்பதில் நம்பிக்கை உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்.

## கல்வி

கல்வித்துறையில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பெரிய பொக்கணையில் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுச் சிறார்களின் ஏமாற்றம் தவிர்க்கப்பட்டுள்ளது. பொருளாதார சமூக நியமங்களினால் கல்வித்துறையில் வாய்ப்பின்றித் துவண்டு போயிருந்தவர்களுக்கு சிறார் பாடசாலை ஒரு துவக்க முயற்சியாகும். இங்குள்ள மாணவர்கள் டாக்டர்களாக - இஞ்ஜினியர்களாக வர விரும்பினாலும் அதற்கான வாய்ப்பு இல்லாமலேயே இதுவரை காலமும் இருந்திருக்கிறார்கள். இப்போது இதற்கான இதர வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன மாணவர்கள் அனைவருக்கும் இலவச உணவும் உடுக்க உடையும் வழங்கப்படுகிறது. இலவச பாட நூல்களையும், துணை நூல்களையும் வழங்கத் திட்டமுள்ளது. மாணவர்களுக்கு உடுக்க உடை, உணவு மட்டுமன்றி எழுத்தறிவில்லாத முதியோர்களுக்கு முறைசாராக் கல்வி வசதிகளும் செய்யப்படவுள்ளன.

சரஸ்வதியின் பார்வை இக் கிராமத்தில் படாமலும் இல்லை. கோபாலகிருஷ்ணன் தங்கராசா என்ற மாணவர் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரியில் ஏ. எல். வகுப்பில் படிக்கிறார். ஒரு 'டி'. ஐந்து 'சி', இரண்டு 'எஸ்'களுடன் இவர் க. பொ. த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இந்த முயற்சி பெரிய பொக்கணையைப் பொறுத்த வரையில் ஒரு சாதனையாகும்.

ஆரம்ப சுகாதாரநிலையம், உடனுதவி நிலையம், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் ஆகியன இந்த வீடமைப்புத்திட்டத்தை அணிசெய்வதோடு, சிறுவர்களுக்கு ஒரு நம்பிக்கையான எதிர்காலத்தையும்கோடிட்டுக்காட்டுகின்றன

## சுகாதாரம்

போஷாக்கின்றி, குணமாகும் நோயைக்குணமாக்க வசதியின்றி இருந்த இம்மக்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு வரப்பிரசாதமாகும். மக்களுக்குத் தேவையான இன்றியமையாத பொருளான அரிசி மண்ணெண்ணெய், சீனி போன்ற பொருள்களை மக்கள் நியாய விலைக் கடை மூலம் கட்டுப்பாட்டு விலையில் பெறுவதற்காக இத்திட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமூக பொருளாதார அடுக்கமைப்பில் நலிந்தவர்கள் தொடர்ந்தும் நலிந்தவர்களாக வாழவேண்டும் என்ற 'அறமும் ஒழுக்கமும்' இவர்களிடம் இல்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு போராட்டம் என்ற உணர்வும், நெஞ்சுறுதியும் பெரிய பொக்கணைக் கிராமத்தில் இயல்பாகவே காணப்படுகின்றது.

''வீடமைப்புத் திட்டத்தில் பெரிய பொக்கணை வாசிகளின் உழைப்பும் உள்ளது'' என்கிறார் ராஜன். குடியிருப்புகளைக் கட்டுவதில் மூன்று நான்கு மாதங்கள் பெரிய பொக்கணைக் கிராம வாசிகள்தமது உடலுழைப்பைநேர்மையுடன் வழங்கியுள்ளார்கள்





...லீபன்

(B/3194)

நினைவாக..........

உண்ணாதிருந்தான் உறுதியாய் இருந்தான்
எண்ணமெல்லாம் எம்தேசம் என்றேயாக!
தேகம் மீதில் தேசவேள்வி செய்தவன் நாளில்
திடங்கொண்டு எழுவோம்!!



ஜுவல்லர்ஸ்
74/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# தியாகச்சுடர் திலீபனின் 4-வது ஆண்டை நினைவு கூருகின்றோம்



தன்னலம் தனைத் தகர்த்து
தாழ்வுறும் தமிழர் வாழ்வில்
நன்னலம் காண வேண்டி
நல்லூரான் வீதி தன்னில்
நன்னீர் தானுமின்றி
நாமூன்று நாளிருந்து
தன்னுயிர் நீத்த அந்த
தமிழ்மகனைநினைவுகொள்வோம்!

## வடமாகாண தெங்குபனம்பொருள் கூட்டுறவுச்சங்கங்கள்

பருத்தித்துறை தெ.ப.பொ.கூ.சங்கம்
கட்டைவேலி ,,
அச்சுவேலி ,,
கோப்பாய் ,,
யாழ். மாநகர ,,
கோண்டாவில் ,,
சுன்னாகம்-அளவெட்டி-மல்லாகம் ,,
தெல்லிப்பழை ,,
மானிப்பாய் ,,
பண்டத்தரிப்பு ,,

அரியாலை தெ.ப.பொ.கூ. சங்கம்
சாவகச்சேரி ,,
ஊர்காவற்றுறை ,,
வேலணை ,,
பூநகரி ,,
கிளிநொச்சி ,,
கொடிகாமம் ,,
சங்கானை ,,
பச்சிலைப்பள்ளி ,,
முல்லை. மாவட்ட தெ. ப. பொ.
கூட்டுறவுச் சங்கங்களின் இணைவும்

சங்கங்களின் சங்கானை வடிசாலை
சங்கங்களின் வரணி வடிசாலை
சங்கங்களின் முல்லை மாவட்ட புதுக்குடியிருப்பு வடிசாலை

# வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

(B/2187)

# வழிபாட்டிற்கு உரியவனாகும் - திலீபன்

இந்தியாவில் ஆரியர் குடியேறிய காலத்தில் ஆரியர்களின் முக்கிய யுத்தவீரர்களில் ஒருவன் இந்திரன். ஆரியக் குடியேற்றங்களை ஸ்தாபிக்கும் பெருமுயற்சியில் பல வெற்றிகளை நிலைநாட்டியவன் இந்திரன். அவன் ஈட்டிய பெருவெற்றிகளினதும் சாதனைகளினதும் நினைவாக அவனை பிற்காலத்தில் வழிபாட்டுக்குரியவனாக்கிக் கொண்டனர் ஆரியர். அவனது சாதனைகளால் அவனைத் தெய்வத்தன்மை உள்ளவனாக உயர்த்தினர். இது ஒரு பண்டைய வரலாற்று நிகழ்வு.

ஆனால் எமது கண்முன்னால் இன்று திலீபன் என்னும் ஒரு மனிதன் வழிபாட்டுக்குரியவனாக வளர்வதை நாம் காண்கிறோம். திலீபனின் தியாகம் அவனை வழிபாட்டுக்குரிய நிலைக்கு உயர்த்தியுள்ளது. தமிழர்களின் இதயங்களில் வளர்ந்துவரும் திலீபன் காலகதியில் தமிழர்களின் இதயத்தைத் தனதாக்கிவிடுவான் என்பதிற் சந்தேகமில்லை. இந்திரன் மரணித்து சில நூற்றாண்டுகளின் பின்புதான் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டான். ஆனால் திலீபன் சில வருடங்களுக்குள்ளேயே அந்த நிலையை நோக்கி வளரத் தொடங்கிவிட்டான்

வடமொழியில் திலீபன் என்ற சொல்லின் அர்த்தம் இதயத்தை வென்றவன் என்பதாகும். இப்பெயரின் பொருளை உணர்ந்து திலீபன் இப்பெயரை தனக்கு இட்டுக் கொண்டாரா? இல்லையா? என்பது எனக்குத்தெரியாது. ஆனால் அப்பெயரின் பொருளுக்கு ஏற்ப திலீபன் இன்று தமிழ் மக்களின் இதயங்களை வெல்பவனாக உள்ளான் என்பது மட்டும் உண்மை.

ஆக்கிரமிப்புக்கொள்ளவந்த இந்தியச் சிப்பாய்களிற் சிலர் கூட திலீபனின் உருவப்படங்களுக்கு மரியாதை செய்ததாக நன்அறிகிறேன். எனவே திலீபன்எதிரி, நண்பன்என்ற எல்லையைக்கூடக் கடந்விருப்பு வெறுப்புக்கு அப்பால் பலராலும் மேலும் மதிக்கப்படும் நிலைக்கு வளர்வான் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இன்று சிறுவர்களின் இதயங்களைத் திலீபன் கொள்ளை கொள்ளும் வேகத்தைப்பார்த்தல் எதிர்கால வரலாற்றில் தமிழ் மக்களின் ஆதர்ஷபுருஷனாக, முன்னுதாரணம் மிக்கவனாக திகழ்வான் என்று துணிந்து கூறலாம்.

திலீபனுடன் நான் மிகவும் நெருக்கமாகப் பழகியவன். ஆதலினால் அவனைப்பற்றி கணிசமான அளவு புரிந்து கொண்டவன் என்று நினைக்கின்றேன். திலீபனுடனான எனது அனுபவத்தின் மூலம் திலீபனைப் பற்றிய சில குறிப்புக்களை இங்கு எழுதமுனைகிறேன்.

தனது வாழ்வு சாதனை மிக்க ஒன்றாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் அவனிடம் எப்போதும் குடிகொண்டிருந்தது. நல்லதைச் செய்வதில் பெரும் நாட்டம் உள்ளவன். ஏழைகள் மீது அக்கறை மிக்கவன். அவன் இயக்கத்திற் சேர்ந்து ஏறக்குறைய ஓராண்டின் பின்பே நான் அவனைச் சந்தித்தேன். நான் அவனைச் சந்தித்த ஆரம்ப காலகட்டங்களில் ஏழைகள் மீது தனக்கிருக்கும் அக்கறையை அடிக்கடி வெளிப்படுத்தினான். ஏழைகள் மீது அவன் கொண்டிருந்த அக்கறை என்னைப் பொறுத்த வரையில் மிகப் பெரிய விடயமாகவே எனக்குப் பட்டது.

ஏன் தமிழீழத்தை விரும்புகிறாய்? என்று ஒருநாள் கேட்டபோது அவனது வயதை ஒத்த ஏனைய இளைஞர்கள் அளிக்கும் பதிலிலிருந்து வேறுபாடான பதிலை அளித்தான். அதாவது: ''ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடற்ற ஒரு சமூகத்தைத் தோற்றுவிக்க, சாதி வேறுபாடற்ற ஒரு சமூகத்தை உருவாக்க'' என்ற பொருளில் ஒரு சிறு பிரசங்கத்தையே எனக்குச் செய்தார்

திலீபன் மனவேகம் மிக்கவன், உணர்ச்சி ததும்புபவன். நினைத்த மாத்திரத்தே ஒரு விடயத்தைச் செய்து முடித்து விடவேண்டும் என்று துடிப்பவன். செயலூக்கம் மிக்கவன் தனது எண்ணங்களைத் திடீரென்று யாருக்கும்வெளிப்படுத்தி விடுவான். தனது மனதில் ஓர் எண்ணம் தோன்றிவிட்டால் அந்த எண்ணத்தை வெளிப்படுத்திச் செயற்படுத்த முனைவான். திலீபன் நன்றாகவே கதைப்பான், அதேபோல நன்றாகவே செயற்படுவான். திலீபன் யானைபோல அடக்கமானவன்அல்ல. எறும்புபோல உழைப்பவன் சிட்டுக்குருவி போல பறந்து திரிபவன், யானைபோல கபடமற்றவன். திலீபனின் ஞாபகசக்திபற்றிய மனப்பதிவு என்னிடம் இல்லை. ஏனெனில் கடந்த காலம் பற்றியோ, நடந்தசம்பவங்கள்பற்றியோ, அவன் பொதுவாக என்முன் இரைமீட்டதாக எனக்குத் தெரியவில்லைஆதலினால் அவனது ஞாபக சக்திபற்றிய மனப்பதிவுகள் எதுவும் என்னிடம் இருக்க முடியவில்லை

அயராதுஉழைப்பதைஇவன் ஒரு தனிக்கலையாகக் கொண்டவன். எதற்கும் நேரம் காலமின்றிச்செயற்படுவான். இவன் உழைப்பில் முழு ஆர்வம் மிக்கவனாக இருப்பதால் குளிக்க, முழுக நேரமற்றவனாக இருப்பான். ஆதலினால் நேரம் கெட்ட நேரங்களில் எல்லாம் இவன் குளிப்பதுண்டு அனேகமாக இவன் இரவிற்தான் குளிப்பதுண்டு தனது சாப்பாட்டின் மீது அக்கறை அற்றவனாக இருப்பான். ஆனால்தான்கூட்டிச்செல்லும் ஒருவருடைய சாப்பாட்டு விடயங்களில் அக்கறையாக இருப்பான். இவனுக்கு சோர்வு சலிப்பு என்றால் என்னவென்றே தெரியாது.

இவனுக்கு இரவிற்கூட

## சாரணன்

நேரம் கிடைப்பதில்லை. அனேகமாக ஊர் உறங்கும் நேரங்களில் எல்லாம் கூட இவன் உழைப்பான் என்னை இவன் அதிகமாக இரவிற்தான்சந்திப்பதுண்டு. நான் நித்திரையாக இருக்கும் பலவேளைகளில் இவன் வந்து எழுப்புவான். இப்படியாக ஒரு நாள் இரவு இரண்டு மணிக்குக்கூட என்னை வந்து எழுப்பியுள்ளான். அவனைப் பொறுத்த வரையில் அவனுக்கு அது இரவல்ல. இவன் சலிப்படையாது சோராது இருப்பான். இரவில் சில தடவைகள் என்னுடன் தங்கியுள்ளான். தான் சலிப்படையாத அவன் நான் சலிப்படையும் வரை என்னுடன் கதைப்பான் என் சலிப்பைக் கண்ட பின்பு தான் சரி, இனி நித்திரை கொள்வோம் என்று கூறுவான். அவன் என்னுடன் தங்கிய இரவுகளில் நித்திரை கொள்ளத்தொடங்கும் நேரம் ஏறக்குறைய இரவு மூன்று அல்லது நான்கு மணியாகும். எப்படியோ காலை ஐந்து மணியளவில் எழுந்து போய் விடுவான்.

இவன் பெண்கள் மீது அதிக பரிவும், பாசமும் மிக்கவன். இப்பாசத்தின் விளைவால் ஆரம்பத்தில் பெண்கள் இயக்கத்திற் சேரக்கூடாது, அவர்கள் கஷ்டப்படக் கூடாது என்று இவன் நினைத்ததுண்டு. ஆனால் பிற்காலத்தில் இவனே முன்னின்று பெண்கள் அமைப்பைத் தோற்றுவிப்பவனுமானான். இவன் பெண்கள்மீது காட்டும் பாசத்திற்கும் மதிப்புக்கும் அளவே இல்லை என்று கூறுவேன்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வரக்கூடும் என்ற அச்சம் 1985 ஆம் ஆண்டளவிலேயே இவனது மனதில் இருந்தது. இந்திய இராணுவம் பற்றிய இவனது முதலாவது கவலை பெண்கள் பற்றியதுதான். ''இந்திய இராணுவம் வந்தால் பெண்களைக் கற்பழித்து விடுவார்களா?'' என்று இவன் அடிக்கடி கேட்பான்.

பங்களாதேஷில் இந்திய இராணுவம் கற்பழித்தமைக்கான சாட்சியங்கள் உண்டு என்று ஒரு நாள் குறிப்பிட்டேன். அப்போது இருந்து கதைத்துக் கொண்டிருந்தவன் திடீரென எழுந்து உணர்ச்சி மேலிட தனது கைகளைப் பார்வனை செய்த வண்ணம் பின்வருமாறு கூறினான்:- ''எங்கள் பெண்களை இந்திய இராணுவம் கற்பழிக்குமேயானால் ஆயுதம் கையில் இல்லாது போனாலும் கூட எனது நகத்தினாலும், பற்களினாலும் இராணுவத்தை குத்தியும் கடித்தும் கொல்லுவேன்'' என்றான். இதன் பின்பு மறுநாள் காலை மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் இந்திய இராணுவம் பங்களாதேஷில் கற்பழித்தமை பற்றிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

## நினைவுக் குறிப்பும் மதிப்பீடும்

இதனைக் கண்ட யாழ். பல்கலைக்கழக சிரேஷ்டவிரிவுரையாளர் ஒருவர் என்னைக் கண்டு தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார். இந்திய இராணுவம் உண்மையில் பங்களாதேஷில் கற்பழித்ததா? என்று வினவினார். அரசு செய்த சில நல்ல விடயங்களை பெரிதும் பிரசாரம் செய்துள்ளது. அதாவது பாகிஸ்தானியரின் இராணுவ முகாம்களில் நிர்வாணமாக வைக்கப்பட்டிருந்த வங்காளப் பெண்களுக்கு சீக்கிய இராணுவம் தமது தொப்பிகளை ஆடையாகக் கொடுத்த கதை உண்டு, அதேவேளை தாம் செய்த கற்பழிப்புக்களை மறைத்துள்ளார்கள். இதற்கும் சில சாட்சியங்கள் உண்டு என்றேன். ஆயினும் எனது கருத்தின் மீது அவருக்கு நம்பிக்கை வரவில்லை.

இதனைக் கேள்விப்பட்டுச் சிறிது நேரத்தின் பின்பு நான் திலீபனைத் தேடிச் சந்தித்தேன். சுவரொட்டி பற்றி விசாரித்தேன். தான் ஒட்டியதாகக் கூறினார். அதனை அகற்றுவது நல்லது என்றும், இப்படி ஒட்டுவது தந்திரோபாயமற்ற செயல் என்றும் கூறினேன். சிறிது நேரம் திலீபன் விட்டுத்தர மறுத்தார்: இச்சுவரொட்டி பற்றி ஒற்றர்கள் இந்தியாவுக்குத் தகவல் கொடுக்கக் கூடும் என்றும், இதனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தனது எதிரியாகக் கணிக்க வாய்ப்பு ஏற்படும் என்னும் உண்மையை நாம் விளங்கி இருந்தாலும் தந்திரோபாய ரீதியில் இதனைச் செய்யக் கூடாது என்றும் கூறினேன். எனக்காக அதனை அகற்றுவதாக ஒப்புக்கொண்டார். என்னிடம் ஒப்புக் கொண்டவாறே சிறிது நேரத்துக்குள் சுவரொட்டிகளை அகற்றிவிட்டார். உண்மையில் இந்திய இராணுவத்தின் வரவை திலீபன் பெண்களுடன்தான் முதலில் சம்பந்தப்படுத்திப் பார்த்தார், அதனை அவனால் சகிக்கவே முடியவில்லை இந்த உண்மையைப் பெண்கள் தெரிந்து கொள்ளும்போது திலீபனை பெண்கள் தமது தெய்வத்திலும் மேலாக மதிப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இவன் அடிப்படையில் ஒரு பாலியற் தூய்மைவாதி. அவனது உணர்வுகளைப் பார்த்துப் புரிந்து கொண்டவன் என்ற வகையில் இதில் இவன் ஓர் அப்பழுக்கற்ற குழந்தை போன்றவன்.

தான் மரணமடைவேன் என்று திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டே திலீபன் உண்ணாவிரதமிருந்தான். உண்ணாவிரதம் இருப்பதற்குச் சில தினங்களுக்கு முன் திலீபன் என்னைச் சந்தித்தான். தானும், முரளியும் மற்றும் நால்வருமாக மொத்தம் ஆறுபேர் நாளை மறுதினம் பல்கலைக்கழக முன்றலில் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போகிறோம் என்று கூறினார். நான் திடுக்குற்றேன். திலீபன் சொன்னதைச் செய்வான் என்பது எனக்குத் தெரியும். இந்திய அரசு மரணிக்கவிடும் என்பதும் எனக்குத் தெரியும். மரணம் என் கண்ணுக்குத் தெரிந்தது. நான் சற்று நிலைதடுமாறி இதற்கு வேறு மாற்று வழி இல்லையா? என்று கேட்டேன். உண்ணாவிரதம் இருப்பது உறுதி என்று கூறினான், உறுதி என்ற சொல்லை மிகச் சாதாரணமாக எப்போதும் பயன்படுத்தும் அவன் இந்த விடயத்திலும் உறுதி என்ற சொல்லை மிகச் சாதாரணமாகப் பயன்படுத்தினான்.

நான் திலீபனின் கையைப் பிடித்தேன். இந்திய அரசு கண்டிப்பாக சாகவிடும். அதில் எனக்குச் சந்தேகமில்லை. சாகவிடப் பல காரணங்கள் இருந்தாலும் ஒரு காரணம் மட்டும் முக்கியமானது, அதற்காக அது சாகவிடும் என்றேன். அதாவது உண்ணாவிரதத்தை ஏற்று இந்திய அரசு புலிகளின் கோரிக்கையை நிறைவேற்றினால் சிங்களப் பிக்குகள் உடனடியாகத் தாமும் சாகும் வரைஎன்று கூறி உண்ணாவிரதமிருக்கத் தொடங்குவார்கள். எனவே உங்களைச் சாகவிட்டாத்தான் பிக்குகள் சாகும்வரை என்ற உண்ணாவிரதத்தை இருக்கத் துணியமாட்டார்கள். நீங்கள் காப்பாற்றப்பட்டால் அதன்படி தாமும் நிச்சயம் காப்பாற்றப்படுவோம் என்ற நம்பிக்கையில் சிங்கள பிக்குகள் உண்ணாவிரதமிருப்பார்கள். எனவே இதனைத் தடுப்பதற்காக இந்தியா உங்களைச் சாகவிடும் என்று கூறினேன்ச் இவற்றை நான் கூறிய பின்பு சற்றும் தயக்கமின்றி ''எங்கள் மரணத்துடன் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்'' என்று இயல்பாகக் கூறினான். மரணங்களைத் தவிர்த்து பரந்த அளவில் தொடர் உண்ணாவிரதங்களை மேற்கொண்டால் என்ன என்று கேட்டேன். அவன் என்னுடன் பழகிய நாட்களின் நினைவுகளின் பெயரால் அவனது மரணத்தை என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. ஆனால் அவனோ மரணத்தை ஏற்றுக்கொண்டவனாய், மரணத்தை முன்னறிந்தவனாய் உண்ணாவிரதத்திற்குப் போனான்.

இந்திய அரசு தன்னை மரணிக்கவிடும் என்ற முழு முன்னறிவுடனும்தான் திலீபன் உண்ணாவிரதமிருக்கப் புறப்பட்டான் என்ற செய்தியை நான் சாட்சியாக நின்று தெரியப்படுத்துகிறேன். ஆதலினால் அவன் உண்ணாவிரதமிருக்கப் புறப்பட்டபோது தன் உயிரின் மீது எவ்வித நப்பாசையும் அவனிடம் இருக்கவில்லை.

யாழ். பல்கலைக்கழக முன்றலில் ஆறுபேர் உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பது என்ற திட்டத்திற் சிறிது மாற்றம் செய்ததனால்நல்லூரில் தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தான் அதுவரை தமிழர் கூட்டணியிடம் இருந்த உண்ணாவிரதம் என்னும் காண்டீபத்தைத் திலீபன் தட்டிப்பறித்து தனக்கே உரியதாக்கிவிட்டான்.


**புங்குடுதீவு - நயினாதீவு**
**ப. நோ. கூ. சங்கம் (வ - து)**

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின கிளைக்குழுத் தேர்தலுக்காக அங்கத்தவர் அட்டவணை 31-12-1991 உடன் மூடப்படவிருக்கின்றது. அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் தங்கள் தங்கள் கிளைகள் மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(B/3196) — செயலாளர்


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்
11.06.1961



வீரமரணம்
26.04.1958

**மேஜர் சுரேந்திரன்**
(காளிராசா சிறிபாஸ்கரன்)
(முருகாபுரி, உப்புவெளி, திருக்கோணமலை)

தமிழ் மண்ணை மீட்டெடுக்க
உன் உயிரையே அர்ப்பணித்தாய்!
தமிழீழம் மலர்ந்திடவே
தன் மானம் காக்கப் புறப்பட்டாய்!
சலப்பையாற்றினிலே சமர் புரிந்த வீரனே
சரித்திரமாகிவிட்ட தமிழ் மகனே
நிலத்தையே அந்நியன அழிக்கவந்தபோது -அவன்
குலத்தையே அழிக்கப் புறப்பட்ட கோமகனே!
உன் பணி நாம் தொடர்வோம்.

திருமலை. திருமலை மக்கள்
(B- 3197)

ஐ. நா. அதிகாரிகள் தடுத்துவைப்பு

# சி.ஐ.ஏ. என ஈராக் குற்றச்சாட்டு: வளைகுடாவில் மீண்டும் பதற்றம்

(வாஷிங்டன்)

ஈராக்கில் அணு ஆயுதங்களையும், இரசாயன ஆயுதங்களையும் மேற்பார்வையிடச் சென்ற ஐ நா. குழுவினரை ஈராக்தடுத்துவைத்திருப்பதைத்தொடர்ந்து வளைகுடாவில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஈராக் அலுவலகம் ஒன்றில் ஐ நா. குழுவினர் கைப்பற்றிய அணுவாயுத திட்டம் தொடர்பான ஆவணங்களை மீளக் கையளிக்கும் வரை இவர்கள் தடுத்து வைக்கப் படுவார்கள் என்று ஈராக் கூறியுள்ளது. 44 அங்கத்தவர்களைக் கொண்ட ஐ நா. பாதுகாப்புச் சபைக்குழு தொடர்ந்தும் பக்தாத்தில் இருந்து வருகின்றது. ஐ.நா. சபையின் மேற்பார்வையாளர் குழுவின் தலைவர் டேவிட்கே ஒரு சி. ஐ. ஏ. உளவாளி எனவும், அவர் ஐ. நாவில் பணியாற்றுபவர் அல்ல எனவும், ஈராக் பிரதிப் பிரதமர் தாரிக் அசீஸ் கூறியுள்ளார்.

இதனிடையில்ஒருசிலமணித்தியாலங்களில் மேற்பார்வையாளர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும், ஐ.நா. ஹெலிக்கொப்ரர்கள் ஈராக்கிற்கு மேலாகப் பறப்பதற்கு அனுமதிக் கடிதம் வழங்கப்பட வேண்டுமென வும். இன்றேல் அதன் விளைவுகளை ஈராக் எதிர் நோக்க வேண்டி வரும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபைத்தலைவர் நேற்று எச்சரிக்கைசெய்தார்

டேவிட்கே கருத்துத் தெரிவிக்கையில் ஈராக்கின் அணு ஆயுதத்திட்டங்கள்,பற்றிஏராளமான தகவல்களைக் கொண்டஆவணங்கள்கிடைத்துள்ளன எனவும், அவற்றிலிருந்து ஈராக்கின் அணு ஆயுதத் திட்டம், அணுவாயுத உற்பத்தி அவற்றிற்கான மூலப் பொருள்கள் விருத்தி பற்றியும் கணிசமான தகவல்கள்கிடைத்துள்ளன என்றார்.

## மணலாற்றில் மக்கள்

ஓர் கந்தசுவாமி ஆலய வீதியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளரும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவருமான திரு.கரிகாலன் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

மணலாறில் உருவாகிவரும் மக்கள் எழுச்சி தமிழீழம் முழுவதும் ஏற்பட வேண்டுமென்றும் அப்பொழுதுதான் எமது தாயகத்தை எதிரியிடமிருந்து மீட்டெடுக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

மேலும் தென் தமிழீழத்தின் நிலைமை பற்றி அவர் குறிப்பிடும்போது சிறிலங்காவின் படைகளாலும், சிங்கள, முஸ்லிம் காடையர்களாலும், துரோகக் கும்பல்களினாலும் நீண்டகாலமாகத் தொடர்ச்சியாகத் துன்பங்களையும், துயரங்களையும் எதிர்நோக்கிவரும் தென் தமிழீழ மக்கள் தாயக விடுதலையில் அசையாத நம்பிக்கையுடன் எம்முடன் இணைந்து போராடி வருகின்றனர் என்றார்.

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்ட மக்கள் உறவுக்கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு இளம்பருதி தலைமை தாங்கினார். கூட்டத்தின் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களான திரு. பரா, செல்வி ஆர்த்தி, திரு. பாவேந்தன் மற்றும் வட்ட அவைத் தலைவர் திரு. கணபதிப்பிள்ளை ஆகியோரும், தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் திரு. உருத்திரா அவர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க)

# சிறிலங்கா தூதரகம் முன் டில்லியில் ஆர்ப்பாட்டம்

சமாஜவாதி ஜனதாதள் உறுப்பினர்கள் புதுடில்லியில் இந்தியாவுக்கான சிறிலங்கா உயர் ஸ்தானிகராலயத்தின் முன்னர் நேற்றுஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையில் நிலைகொண்டிருந்த சமயம், சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இந்தியப் படைகளுக்கு எதிராகப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார்என்பதை கண்டிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிறிலங்கா ஜனாதிபதி நிபந்தனை யற்ற மன்னிப்பு கோரவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

## அமேதியில் சோனியா?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா அமேதி தேர்தல் தொகுதியில் போட்டியிட முன்வரக்கூடும் என்று காங்கிரஸ்கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி டில்லியிலிருந்து வெளியாகும் ட்றிபியூன் இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## அரசியல்

யாசவும் செய்யப்பட்ட முறையீடுகளைத் தாம் பரிசீலித்து வருவதாகவும், விரைவிலேயே முடிவு அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை புதுடில்லியில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள சபாநாயகர் முகமட் வருகின்ற 8ஆம் திகதியேநாடு திரும்புவாரென வேறொரு செய்தி தெரிவிக்கின்றது.

## எட்டு புலிகள்

துறை)

★ வரதப்பா - (தங்கவேலாயுதம், விஜயராஜன்,மல்லாகம்)

★ மலேசிமன் - (இராஜேந்திரம், திவாகரன், கரணவாய் தெற்கு)

★ விக்னம் - (இளங்கோ, பரணிதரன், கரவெட்டி)

★ ரஞ்சன் - (சுந்தரம், சண்முகநாதன், வாழைச்சேனை)

★ தமிழ்வாணன் - (இராசதுரை, குலம், மட்டக்களப்பு)

★ அற்புதன் - (கணபதிப் பிள்ளை, மகேந்திரன், தம்பலகாமம் திருமலை)

அதேவேளை மணலாறு மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குணசீலன்- (இராசா, சிறிகுமார், ஆனங்குளம் முல்லைத்தீவு) என்பவரும் நேற்று வீர மரணமடைந்தார்.

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## முறைப்பாடுகளே

பதவியை இராஜினாமாச் செய்வதற்கான காரணங்களை எடுத்து விளக்கி சபையில் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் பாராளுமன்ற அதிகாரங்களையும் சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளிலேயே தான் ஈடுபட்டதாகவும் தனிப்பட்ட ஒருவருக்கெதிராக அவதூறு செய்வது தனது நோக்கமல்ல என்றும் அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

## நீடிப்பை

அவர் மேலும் பேசுகையில் ஆனையிறவில் எமது இராணுவத்தினர் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து இப்போது விடுதலைப்புலிகளைப் பூண்டோடு அழிக்கும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இதுஇறுதியில் வெற்றியைத் தரும் என்றும்குறிப்பிட்டார்.

## மனச்சாட்சிக்கு

யல் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களும் தமது மனச்சாட்சிக்கமையவே நடந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

---

# தியாகி திலீபன் நான்காம் ஆண்டு நினைவு இறுதிநாள் நிகழ்ச்சிகள்

## உண்ணாநோன்பும், நினைவுக்கூட்டமும்

இடம்: நல்லூர்

காலம்: 26 . 09 . 1991

தீபம் ஏற்றுதல்: திரு. வினோதன் (அரசியல் பொறுப்பாளர் யாழ். மாவட்டம்)

தேசிய கொடியேற்றல்: திரு. தமிழ்ச்செல்வன் (தளபதி யாழ் மாவட்டம்)

காலை 8.00மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பம்

திலீபன் தியாக மரணமடைந்த நேரமான 10.48 மணிக்கு அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி திலீபனின் உருவப்படத்திற்கு மலர் சாத்துவார்கள். தொடர்ந்து உண்ணாவிரதம் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு நிறைவுறும். அதனைத் தொடர்ந்து மாபெரும் நினைவுக் கூட்டம் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும்.

தலைமையுரை: திரு. மாறன் (யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)

நினைவுரைகள்: செல்வி ஜெயா (விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி பொறுப்பாளர் தமிழீழம்)

திரு. தமிழ்ச் செல்வன் (தளபதி யாழ்: மாவட்டம்)

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் (அரசியல் ஆலோசகர் தமிழீழ விடுதலைப் புலிகள்)

திரு. பாலகுமாரன் (முக்கிய பிரமுகர் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி)

திரு. பரா (பொறுப்பாளர், மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு தமிழீழம்)

சிறப்புரை: திரு. கோ. மகேந்திரராசா (தலைவர் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி)

கலை நிகழ்வுகள்

1. போர்க்கால எழுச்சிப்பாடல்கள் (சாந்தன் குழுவினர்)
2. நாடகம்

அனைத்து தமிழீழ மக்களும் அணிதிரண்டு வந்து தியாகி திலீபனின் கனவை நனவாக்க உறுதிபூணுமாறு மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

## அறிவுறுத்தல்

தமிழ்மொழியிலும் அச்சிடப் பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வது தொடர்பான அறிவுறுத்தல் ஆங்கில மொழியில் மாத்திரமேவெளியாகியுள்ளது. இதனால் விண்ணப்பதாரிகள் சிரமத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகங்கள் மானியக் குழுவின் அனுமதி பெற்று இக்கற்கைநெறிகள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப் படுவது இது முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமலை

அவற்றிற்குரிய மகஸீன் 09, ரீ.என்.ரீ.கைக்குண்டுகள் 03, ஐ. எம். ரவைகள் 251 ஆகியனவும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 7 40 மணியளவில் திருமலை மாவட்டத்திலுள்ள முதலக்குளம் பிரதான விமானப்படைமுகாமிற்கும் பன்சாலைவிமானப்படை முகாமிற்கும் இடையில் ரோந்து படையினர் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டு காத்திருந்தனர். ஆனால் இதனைரோந்துவந்த இராணுவத்தினர் முதலிலேயே கண்டு கொண்டமையினால் உடனடியாகக் கண்ணிவெடியை வெடிக்க வைத்த புலிகள் இராணுவத்தினர்மீது துப்பாக்கி பிரயோகமும் மேற்கொண்டனர். இத்தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் மேஜர் ஜீவா வீரமரணமடைந்தார்.

## ஜனாதிபதி

கொள்ளப்படவுள்ளது

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகளும் ஆதரித்துள்ளன

## மணலாற்றில்

மேலும் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்திருப்பதாகவும் பத்தொன்பது பேர் காயம் அடைந்திருப்பதாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்திவெளியிட்டுள்ளன. புலிகள் கடுமையான எதிர்த் தாக்குதல்களைநடாத்திவருவதாகவும், இராணுவம் ஹெலிகொப்ரர்கள் மற்றும் போர் விமானங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடாத்திவருவதாகவும் அச்செய்திகள் மேலும் கூறுகின்றன

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மூளாயிலுள்ள சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட பயிற்சி நிறைவு பெற்றதையடுத்து கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளையும், நாளை மறுதினமும் கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது.

## வடபகுதி

சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (11)

★ தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு பூநகரிப் பகுதியில் பல இடங்களில் அஞ்சலிக் கூட்டங்கள், உண்ணாவிரதங்கள் என்பன இடம்பெற்று வருகின்றன

★ உருத்திரபுரத்தில் தியாகி திலீபன் நினைவாக அடையாள உண்ணாவிரதம் மற்றும் சிறிமாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனையும் இன்று இடம்பெறவுள்ளது. வறிய குழந்தைகளுக்கு பாடசாலை உபகரணங்களும், மற்றும் தெரிவு செய்யப்பட்ட மூவருக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் பூமிதானமும் வழங்கப்படவுள்ளது. (58)

★ முல்லை மாவட்டத்தில் சகல இடங்களிலும் திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு அஞ்சலிக் கூட்டமும், கலை நிகழ்ச்சியும், உண்ணா விரதமும் நடைபெற்று வருகின்றன. 15-9-91 தொடக்கம் நடந்து வரும் அஞ்சலிக் கூட்டங்களில் மக்கள் பெருமளவு கலந்து கொண்டு வருகின்றனர். 22-ம் திகதி வித்தியானந்தாக் கல்லூரி திறந்த வெளியரங்கில், இடம்பெற்ற கூட்டத்தில் முல்லை பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் வண்ணனும், மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர் அஞ்சலிக் கூட்டத்தை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. 23ஆம் திகதி முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய இடங்களில் மக்கள் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் அனுட்டித்தனர். ஒட்டுசுட்டானில் நேற்று முன்தினமும், புதுக்குடியிருப்பில் நேற்றும் பொதுக்கூட்டங்கள் இடம் பெற்றன. இன்று நெடுங்கேணியில் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

---


யாழ்ப்பாணம் மாநகராட்சிமன்றம்

# ஆதன வரி அறிவித்தல்

1991 ஆம் ஆண்டு 3 ஆம் கந்தாயத்திற்கான ஆதன்வரியை 30-09-91 திங்கட்கிழமை பி. ப. 3·00 மணிக்கு முன்னதாக மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாகக் கீழ் வரும் விபரப்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படுமெனவும், 4 ஆம் கந்தாயத்துக்கான வரியை அக்கந்தாயத்தின் முதல் மாதத்துக்குள் 5 வீத வரிக்கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் - 15 %
குடியிருப்புக் காணிகள்
இவையல்லாத காணிகளுக்கு -20 %

காசோலைகளை, காசுக்கட்டளைகளை, அஞ்சற்கட்டளைகளை "யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்" சார்பில் அஞ்சல் சேவையில் அனுப்பும்போது அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விபரங்களையும் தயவு செய்து இணைக்குக.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(B/3188)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.